11.02.2026 Mcop 345/2022 .ம.சா 1 பான்குமார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் ஒட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். விபத்து எப்படி எவ்வாறு நடந்தது என்றால் 7.3.2021ம் தேதி கட்சி மீட்டிங்கிற்காக திருநெல்வேலி சென்று விட்டு திரும்ப வரும்போது ஆலங்குளம் பெட்ரோல் பல்க் முன்பாக நடந்தது. விபத்திற்குள்ளான வாகனம் ஷிப்ட் கார் ஆகும். அந்த வாகனத்தை ஒட்டியது யார் என்றால் கட்டபொம்மன் என்பவர் ஒட்டினார். நான் பின் இருக்கையில் அமர்ந்து வந்தேன். முதல் தகவல் அறிக்கையில் கூறியுள்ளபடி முன்னால் வந்த லாரியின் இரும்பு பிளேட்டின் பாகம் வெளியே நீட்டிகொண்டிருந்ததால் அதை பார்க்காமல் கார்மீது விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இரும்பு பிளேட்டில் சிகப்பு நிற ஸ்டிக்கர், துணி கட்டப்பட்டிருந்ததா என்றால் இல்லை. நான் பயணம் செய்த காரின் காப்பீடு மற்றும் அதனை ஒட்டிய ஒட்டுனருக்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. காப்பீடு இல்லை. அவருக்கு ஒட்டுனர் உரிமம் இருந்தது. அந்த ஒட்டுனர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தினால் எனக்கு தலையில் அடிபட்டது. அதற்காக சிகிச்சை பெற்று தற்போதுகுணம் அடைந்து விட்டது என்றால் சரியல்ல. தற்போது என்னால் சரியாக வேலை பார்க்க முடியவில்லை. என்னுடன் சேர்ந்து சிவகுமார், கட்டபொம்மன், மகேந்திரன் மற்றொரு நபர் ஆகியோர்கள் பயணம் செய்தோம். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ விடுப்பு ஆவணத்துடன் மருத்துவ ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல்

செய்துள்ளேன். என் வயது, வேலை, வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் கொடுத்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அதிக இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை காப்பீடு விதிகளை மீறி அதிகபடியான பாரத்தை ஏற்றிக்கொண்டு செயல்பட்டதால் 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் எவ்விதஇழப்பீடு தொகையும் எனக்கு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.